**தலைப்பு 221– தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 221 – தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 13 ஆம் திகதி தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 3,117.10 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 2,932.08 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 185.02 மில்லியன் அல்லது 5.94 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 1,411.20 | 1,357.88 | 53.32 | 3.78 |
| மூலதனம் | 1,705.90 | 1,574.20 | 131.70 | 7.72 |
| மொத்தம் | **3,117.10** | **2,932.08** | **185.02** | **5.94** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 76.04 | 55.25 | 57.04 | 68.17 | 345.00 | 223.88 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0060/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 121.04 மில்லியன் கட்டுநிதி மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 718 மில்லியன் ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0155/0102/000 | 717.70 |
| 6000/0000/00/0006/0029/000 | 0.31 |
| மொத்தம் | **718.01** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 42 செலவின விடயங்களிற்கு மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 5 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

(ஆ) 2102 ஆம் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 13 மில்லியன் 2103 ஆம் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு தவறாக மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்கீட்டுப் பதிவு காரணமாக 2102 ஆம் செலவின விடயத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 2.2 மில்லியன் நிதி ஏற்பாட்டினை விஞ்சிய செயற்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 செலவின விடயங்களிற்குத் தேவையான அளவினைக் காட்டிலும் கூடுதலான நிதி ஏற்பாடு, குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையால் குறித்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது பெற்றுக்கொண்டிருந்த குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டு நிதி ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

(ஈ) 2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக தொழில் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்திட்டமான ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 557.74 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அந்த முழுமையான நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்ட தொகை மாதந்தோரும் ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்து மீளப்பெறப்பட்டு அரசாங்க வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளைத் தாண்டிய (காணி வைப்புக்கள் தவிர்ந்த) ரூபா 279,844,320 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000/0000/00/0006/0029/000ஆம் இலக்க குடிவரவு, குடியகழ்வு நிதியத்திற்குரிய வைப்புக் கணக்கில் சில வருடங்களாக காணப்பட்டு வருகின்ற ரூபா 311,295 மீதி தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

22101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், 01 ஆண்டு முதல் 36 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த ரூபா 2,663,614 நிலுவைக் கடன் மீதியினை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் தவறியிருந்தது. அந்த மீதி தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபைகளிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை குறித்த மாகாண சபைகளிடமிருந்து அறவிட்டுக் கொள்ளுமாறு 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 50,777 கடன் மீதியினை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவி நீக்கம் செய்யப்பட்ட, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3.5.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் செயலாற்றல் அறிக்கையொன்று பராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2016 யூலை 30 ஆந் திகதி வரை பராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் தீர்க்கப்பட வேண்டிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருகின்ற பொறுப்புக்கள் ரூபா 9,840,540 ஆகக் காணப்பட்டன.

### 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைக்களத்திற்குச் சொந்தமான 104 வாகனங்களில் 89 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிதிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2015 யூலை 02 ஆந் திகதிய 10/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | அகற்றப்படுதல் வேண்டுமென இனங்காணப்பட்ட வாகனம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3.8 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) போதியளவில் அடையப்படாத பிரதான பணிகள்

அநேகமான பிரதான பணிகள் போதியளவில் அடையப்பட்டிருக்காததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் பிரிவிற்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்

2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அலுவலகத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்று 14 நாட்களிற்குள் அது விசாரணை செய்யப்பட்டு தீர்வுகாணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கிடைத்திருந்த 554 முறைப்பாடுகளில் 186 முறைப்பாடுகளிற்கு தீர்வு காணப்படாதிருந்ததுடன், அந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று 01 மாதம் முதல் 34 மாதங்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

(ii) திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வெளியீடுகள் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம்திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வெளியீடுகள் பிரிவு, 04 திட்டமிடல் துறைகளுடன் தொடர்புடைய 89 பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அவற்றில் 44 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கைத்தொழில் உறவுகள் பிரிவின் செயலாற்றல்

சேவையினை முடிவிற்குக் கொண்டுவருதல் பிரிவிற்கு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அனுப்பிவைக்கப்பட்டிருந்த 197 முறைப்பாடுகளில் 38 முறைப்பாடுகளிற்கு 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரை தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில் பிணக்குகளை தீர்த்துவைத்தல்

மீளாய்வாண்டில் அறிவிக்கப்பட்டிருந்த தொழில் பிணக்குகளின் எண்ணிக்கை 3,540 ஆனதுடன், அவற்றில் 2,174 பிணக்குகளிற்கு மாத்திரம் தீர்வு காணப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைக்கப்படாதிருந்த பிணக்குகளின் எண்ணக்கை 1,366 ஆகும்.

(இ) இலங்கையினை சிறுவர் உழைப்பற்ற வலயமாக மாற்றுதல்

2015 ஏப்ரல் 02 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கையினை சிறுவர் உழைப்பற்ற வலயமாக மாற்றும் உத்தேச செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக 2015 ஏப்ரல் 04 ஆந் திகதி ரூபா 80,562 செலவில் பிரதி தொழில் ஆணையாளர்கள், மாவட்ட அலுவலகங்களிற்குப்

பொறுப்பாகவுள்ள எதவித் தொழில் ஆணையாளர்கள் மற்றும் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்களிற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று இடம்பெற்றிருந்தது. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பிரதித் தொழில் ஆணையாளர்கள் ஊடாக 09 விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ரூபா 96,000 செலவிட்டு நடாத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவை நடாத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கையினை சிறுவர் உழைப்பற்ற வலயமாக மாற்றும் செயற்திட்டம் தொடர்பில் ஆலோசகைளை வழங்கி 2015 யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் அச் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்தை அறிவிக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்ந்த போதிலும், 2016 யூலை 31 ஆந் திகதி வரை குறித்த செயன்முன்னேற்றத்தினை ஒரு பிரதி தொழில் ஆணையாளர் மாத்திரம் செய்திருந்தார்.

(ஈ) பதவியணியினரை பயிற்றுவித்தல்

திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வெளியீடுகள் பிரிவினால் 07 நிகழ்ச்சித்திட்டங்களின் போது ரூபா 453,300 செலவிடப்பட்டு 350 உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், குறித்த அனைத்துத் தொகையினையும் செலவிட்டு 253 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

## 3.9 இழக்கப்பட்ட ஊழியம்

தொழில் திணைக்களத்தின் தொழில் உறவுகள் பிரிவின் தகவல்களின் படி, 2015 திசெம்பர் 31 வரையிலும் பதிவுசெய்யப்பட்டிருந்த தொழில் சங்கங்களின் எண்ணிக்கை 1,907 ஆகும். மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் தொழிற் சங்கங்களின் ஊடாக வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நாட்டிற்கு இழப்பாகியிருந்த மனித நாட்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2015 | 2014 | அதிகரிப்பின் சதவீதம் |
|---|---|---|---|
| வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | 51 | 38 | 34 |
| பங்குபற்றியிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 14,915 | 6,451 | 131 |
| இழப்பாகியிருந்த மனித நாட்களின் எண்ணிக்கை | 82,294 | 37,323 | 120 |

இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான வேலைநிறுத்தங்களில் பங்குபற்றியிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அதனால் நாட்டுக்கு இழபாகியிருந்த மனித நாட்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடிய சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3.10 நிதி மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்டவாண்டில் இடம்பெற்றிருந்த சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்டம் மற்றும் இலங்கையினை சிறுவர் ஊழைப்பற்ற வலயமாக மாற்றுதல் தொடர்பான நிகழ்ச்சிகள் 2015 மார்ச் 08 ஆந் திகதி தொழில் பொதுச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்ததுடன், அதற்கான உணவு பானங்களை பெற்றுக்கொள்கையில் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 177,000 தொகை மோசடி செய்யப்பட்டிருந்தது.

## 3.11 நட்டங்களும் சேதங்களும்

2002 சனவரி 01 ஆந் திகதி பெபிலியானையில் கள்வர்களால் களவாடிச் செல்லப்பட்டிருந்த ரூபா 800,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வாகனத்தினை கண்டுபிடிப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடியாது போயிருந்தது.

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

-----------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீடுகள் பிரிவினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், உத்தியோகத்தர்களிற்கு பயிற்சி பாடநெறிகளை வழங்குதல் தொடர்பில் முறையான வேலைத்திட்டமொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, பாடநெறிகளிற்காக உதவு தொகைகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பாடநெறிகள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 திசெம்பர் மாதத்தில் ரூபா 21.88 மில்லியன் செலவிடப்பட்டு 7 உப பகுதிகளுடன் கூடிய ''ஹைடல்பேஜ்''(HEIDELBERG – GT052-1) அச்சிடுதல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அச்சிடுதல் நடவடிக்கைக்காக அந்த இயந்திரத்தின் 02 உப பகுதிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அது மொத்த இயந்திர இயலளவில் ஏறத்தாழ 10 சதவீதமாக இருந்தது. இந்த இயந்திரத்தின் எல்லாப் பகுதிகளும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் சேவை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 6,286,034 கூட்டுத்தொகையான பெறுமதியுடைய இயந்திரத்தின் பகுதிகள் பாதுகாப்பின்றி அச்சக கட்டிட வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவை துரப்பிடித்துவரும் நிலையில் காணப்பட்டன.

(iii) இந்த அச்சிடுதல் இயந்திரத்தின் மூலம் திணைக்களத்தின் அச்சிடுதல் தேவையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 56.5 சதவீதம் மற்றும் 63 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருந்தது.

(iv) ரூபா 3,194,652 கிரயம் கொண்ட அச்சிடுதல் தட்டுக்களைத் தயரித்தல் (Plate Maker) மற்றும் தன்னியக்க அச்சிடுதல் தகடு செயன்முறைப்படுத்தல் (Automatic Plate Processer) ஆகிய இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டமையால் குறித்த தேவைகள் வெளிவாரி நிறுவனத்திடமிருந்து பணம் செலுத்தப்பட்டு நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருந்தன. அச்சிடும் தகடுகளை தயாரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 50 தகடுகள் மற்றும் 24 லீற்றர் இரசாயணப் பொருட்கள் (Developer LSP 19) என்பன பயன்படுத்தப்படாது காலாவதியாகியிருந்தன.

(v) வருடாந்த தேவை 700,000 – 900,000 அளவிலான ஏபீஎச்(ABH) படிவங்கள் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றிடமிருந்து அச்சிடப்பட்டு மீளாய்வாண்டில் 8 சந்தர்ப்பங்களின் போது ரூபா 15,949,884 செலுத்தப்பட்டிருந்தது. இந்த மாதிரி படிவங்களை அச்சிடுவதற்குத் தேவையான துழையிடுதல் கருவி கொள்வனவு செய்யப்பட்டிருந்திருப்பின் இந்த அச்சிடுதல் இயந்திரத்தினைப் பயன்படுத்தியே அச்சிட்டுக் கொள்வதற்கு முடிந்திருக்கும் என திணைக்களத்தின் மின்னியல் பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 இன் முதல் 08 மாதங்களின் போது தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்த கட்டளைகளின் பெறுமதி ரூபா 97,450,568 ஆகக் காணப்பட்டது. அவற்றில் 25.3 சதவீதமானவை அல்லது ரூபா 24,659,968 அறவிடப்பட்டிருந்ததுடன், 74.7 சதவீதமானவை அல்லது ரூபா 72,790,600 இனை அறவிடும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

(ஈ) 2013 இன் 13 ஆம் இலக்க தொழில் பிணக்குகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொழில் பிணக்ககளை தீர்த்துவைப்பதற்காக நடுவர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டு 03 மாதத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 16 கையளித்தல்களில் 13 இனை தீர்த்து வைப்பதற்காக 03 ஆண்டுகள் முதல் 09 ஆண்டுகள் வரையான நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(உ) தொழில்தருனர்களால் தமது ஊழியர்களிற்கு வழங்கப்பட வேண்டிய நியதிச்சட்ட சம்பளம் அல்லது ஊழியர் சேமலாப நிதி, பாதீட்டுப் படிகள் போன்ற நியதிச்சட்டப் படிகளை செலுத்தாமை, குறைத்து செலுத்தியமை அல்லது வேறு காரணங்களின் நிமித்தம் ஊழியர்களிற்கு அறவிட்டு வழங்கும் நோக்குடன் நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருந்த ரூபா 29,156,975,557 பெறுமதியுடைய 15,304 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களின் கணக்கு மீதியினை அங்கத்தவர்கள் பரிசோதித்தறியக்கூடிய விதத்தில் 30 ‘‘கியோஸ்’’ (Kiosks) இயந்திரங்களை ரூபா 14,917,500 இற்கு கொள்வனவு செய்வதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான கால அட்டவணையொன்று இன்மை காரணமாக ரூபா 6,627,309 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 14 இயந்திரங்களை பொருத்துகையில் பாரிய காலதாமதம் இடம்பெற்றிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியளவில் தொழில் முறைகேடுகள் காரணமாக ஊழல் அல்லது இலஞ்ச குற்றச்சாட்டுக்கள் புலனாய்வு ஆணைக்குழுவின் புலனாய்வு அல்லது வேறு காரணங்களிற்காக 09 உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்திலுள்ள 31.6 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களிற்காக தாமதமின்றி ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 உத்தியோகத்தர்களிற்காக மாத்திரம் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஏ) தொழிலாளர் விசாரணை முறைப்பாடுகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினை (LISA) நடைமுறைப்படுத்துதல்

---

2014 மே 13 ஆந் திகதிய 01(1)/2014 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றியடையச் செய்வதற்காக ரூபா 39,091,100 செலவிடப்பட்டு தொழில் உத்தியோகத்தர்கள், உதவி தொழில் ஆணையாளர்களிற்கு கையடக்க கணனிகள் (Tablet) மற்றும் தன்னியக்க கம்பியற்ற தொலைபேசி (wifi) தொடர்பாடல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அநேக தொழில் உத்தியோகத்தர்களினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கையடக்கக் கணனிகள் உத்தியோகபூர்வ கடமைகளிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், பல்வேறு தவறுகளையும் திருத்திக்கொள்வதற்காக 62 சந்தர்ப்பங்களில் தலைமை அலுவலக களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு திருத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக தொழில் உத்தியோகத்தர்கள் தரவு முறைமைக்குள் நுழைவதற்கு மறுத்திருந்தமையால் அதற்காக முகாமைத்துவ உதவியாளர்களை பங்குகொள்ளச் செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 204,540 செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு திட்டத்தின் மூலம் பல்வேறு தேவைகளிற்காகவும் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 200 கணனிகளில் ரூபா 13,136,645 பெறுமதியான 89 கணனிகள், தொழில் விசாரணை முறைப்பாடுகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தும் (LISA) செயற்திட்டத்தின் தகவல்களை இணையதளப்படுத்துவதற்காக முகாமைத்துவ உதவியாளர்களின் பயன்பாட்டிற்காக தொழில் அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.

(iv) தொழில் விசாரணை முறைப்பாடுகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தும் (LISA) முறைமைக்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத 28 தொழில் அலுவலகங்கள் காணப்பட்டன.

### 3.14 மனித வள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 205 | 142 | 63 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 668 | 400 | 268 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,771 | 1,429 | 342 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 483 | 429 | 54 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 3,127 | 2,403 | 727 | 03 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 727 வெற்றிடங்கள் காணப்பட்டன. திணைக்களத்தினால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், முறையான அங்கீகாரமின்றி 03 ஊழியர்கள் அமைய பதவியணியாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளம்

திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு 13 உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.